ஓய்வூதியச் சுற்று நிருப இலக்கம்: 15/2014

எனது இலக்கம்: ஓய்வு/சுற்றுநிருபம/2014
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
21 -11-2014

அனைத்து மாவட்டச் செயலாளர்கள்,
பிரதேச செயலாளர்கள்,

**வெளிநாட்டில் வசிக்கும் ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள்.**

வெளிநாட்டில் வசிப்பவர்களுக்கான ஓய்வூதியத்தினைப் பெற்றுக் கொள்ளும் ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதிய வழங்கல்கள் தொடர்பில் என்னால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்கள் (**16/2009**: 06-04-2010, **5/2011**: 30-06-2011, **05/2012**: 20-12-2012, **01/2014**: 10-01-2014) மீது தங்களது கவனத்தினைத் திருப்புகின்றேன். இச் சுற்றுநிருபங்களை **www.pensions.gov.lk** எனும் இணையத் தளத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

02. அவற்றில் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றாது வெளிநாடுகளில் வசிக்கும் ஓய்வூதியர்களது ஓய்வூதியங்களை இற்றைவரை பிரதேச செயலகங்களின் ஊடாக வழங்கப்பட்ட வண்ணமுள்ளமை நிரூபணமாயுள்ளது. அவ்வறிவுறுத்தல்கள் மீது தங்களது தயவுமிகு அவதானத்தினைத் திருப்பி, ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலப் பகுதிக்காக வெளிநாடு சென்றுள்ள ஓய்வூதியர்களது உறவினர்களை மற்றும் கிராம உத்தியோகத்தர்களை அறிவூட்டி ஓய்வூதியக் கோவைகளை இத்திணைக்களத்தின் வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவிடம் அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

03. மேலும் இத்துடன் அனுப்பப்படுகின்ற விண்ணப்பத்தினை ஓய்வூதிய விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களைக் கொண்டு பூரணப்படுத்தி, ஒய்வூதியக் கோவை சகிதம் வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவிடம் அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

**வெளிநாட்டு ஓய்வூதிய வழங்கல்கள் தொடர்பில் வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவிடத்திலான விசாரணைகளுக்காக.**

- உதவிப் பணிப்பாளர் - திரு. ஆர்.எம்.ஏ.ஐ. இரத்னாயக்கா :- 011-2209870, 011-2386469
- பிரிவுத் தலைவர் - திருமதி. கே.ஆர்.எஸ்.எம். பண்டாரா :- 011-2209871
- E-mail :- foreignpensions@gmail.com
  :- foreign@pensions.gov.lk
- Fax :- 011-2386469
- Skype :- fpensions

ஓய்வூதிய வழங்கற் செயற்பாட்டினை ஒழுங்கமைக்கும் பொருட்டுத் தங்களிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பினைப் பெறுமதி மிக்கதாய்க் கருதுகின்றேன்.

**(ஒப்பம்)**
**எஸ்.எஸ். ஹெட்டிஆரச்சி,**
**ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.**

பிரதிகள்:
01. செயலாளர் - அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு.
02. செயலாளர் - வெளிவிவகார அமைச்சு.
03. பணிப்பாளர் நாயகம் - வெளிவிவகார அமைச்சு.

# Transfer of Pension File To Foreign Branch

District

Divisional Secretariat

Pension Number

Pension Type
**Civil** **W&OP** **Forces**

Name in Full

Last Payment of Basic, CLA and other Allowances

| Year | Basic | CLA | Allowance |
|---|---|---|---|
| 01/11/09 | | | |

Last payment date

| D | D | M | M | Y | Y | Y | Y |
|---|---|---|---|---|---|---|---|

Passport Number

Date of Birth

| D | D | M | M | Y | Y | Y | Y |
|---|---|---|---|---|---|---|---|

Date of Departure

| D | D | M | M | Y | Y | Y | Y |
|---|---|---|---|---|---|---|---|

Resident Country

Foreign Address

E mail Address

Skype Address

Telephone Number

Local Contact

Name

Phone Number